# ADM COURT, SANKARANKOVIL

தேதி 29.10.2025

அசல் வழக்கு எண். 103/2020

வா.சா.1 (மாரியப்பன்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் முதல்விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே இவ்வழக்கில் வா.சா.1 ஆக எனது முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து எனது தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது

1. 13.08.2020 தேதியிட்ட பிரதிவாதி மற்றும் பிரதிவாதி குடும்பத்தார் மீது வாதி குருவிகுளம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கான மனு ரசீது அசல் மற்றும் புகார் மனுவின் நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. 19.08.2020 தேதியிட்ட வழக்கு தபசில் சொத்து நத்தம் சர்வே எண்.345/30 ல் உள்ள வீட்டு மனையை வாதி திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அளவீடு செய்ய வேண்டி கொடுத்த மனுவின் நகல் மற்றும் அதனுடன் சேர்ந்த அஞ்சலக ஒப்பு அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3. 08.08.2024 தேதியிட்ட செல்லக்கனி என்பவருக்கு சின்னமாரியப்பன் என்ற மாரியப்பன் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**